காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றியம், மற்றும் படப்பை ஊராட்சி தி.மு.க சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் ஏற்பாட்டில் 47 கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி மற்றும் 1000 பேருக்கு அறுசுவை உணவினை காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார்.

தமிழ்நாடு அரசின் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. ராஜேந்திரன், தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் மற்றும் மாநிலங்களவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் குழுத் தலைவர் திருச்சி சிவா ஆகியோருடன் இணைந்து நேற்று (28.11.2024) ஒன்றிய சுற்றுலா மற்றும் கலாச்சாரத் துறை அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத்தை புது தில்லியில் சந்தித்தார்கள். இச்சந்திப்பின் போது தமிழ்நாடு மாநிலத்தில் இருந்து சுற்றுலாத்துறை மூலமாக அனுப்பி வைக்கப்பட்டு ஒன்றிய அரசின் அனுமதி மற்றும் நிதி உதவிக்காக இருக்கும் பல்வேறு திட்டங்களுக்கான நிதி உதவிகளை விரைவாக வழங்கிட கோரிக்கை விடுத்தார்கள். இச்சந்திப்பின் போது தமிழ்நாடு அரசின் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். பி. சந்திரமோகன் மற்றும் சுற்றுலாத் துறை இயக்குநர் மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேலாளர் ஷில்பா பிரபாகர் சதீஷ் ஆகியோர் உடன் இருந்தனர்.

சுற்றுலா தலங்களை மேம்படுத்த - வசதிகளை உருவாக்க

தமிழ்நாடு சுற்றுலாத்துறை திட்டங்களுக்கான நிதி உதவிகளை விரைந்து வழங்குவீர்!

ஒன்றிய அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத்தை - அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் சந்தித்து கோரிக்கை!

புதுடெல்லி, நவ.29-

தமிழ்நாடு அரசின் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. ராஜேந்திரன் தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன் பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் மற்றும் மாநிலங்களவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் குழுத் தலைவர் திருச்சி சிவா ஆகியோருடன் இணைந்து நேற்று (28.11.2024) ஒன்றிய சுற்றுலா மற்றும் கலாச்சாரத் துறை அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத்தை புது தில்லியில் சந்தித்தார்கள்.

இச்சந்திப்பின் போது தமிழ்நாடு மாநிலத்தில் இருந்து சுற்றுலாத்துறை மூலமாக அனுப்பி வைக்கப்பட்டு ஒன்றிய அரசின் அனுமதி மற்றும் நிதி உதவிக்காக இருக்கும் கீழ்க்காணும் பல்வேறு திட்டங்களுக்கான நிதி உதவிகளை விரைவாக வழங்கிட கோரிக்கை விடுத்தார்கள்.

ஸ்வதேஷ் தர்ஷன் (2.0)

1) சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் மாமல்லபுரம் கடற்கரை கோயில் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்தும் திட்டத்திற்கான ரூபாய் 30.02 கோடிகள்

2) நீலகிரி மாவட்டம் இயற்கை சுற்றுலா தலம் பைக்கராவில் சுற்றுலா பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்திடும், திட்டத்திற்கு ரூபாய் 28.3 கோடி ஒதுக்கீடு.

சிறப்பு நிதியுதவி (Special Assistance for State Capital Investment)

1. மாமல்லபுரத்தில் பாரம்பரிய நந்தவனம் அமைக்கும் திட்டத்திற்கு ரூ. 99 கோடி ஒதுக்கீடு.

2. உதகமண்டலம் தேவலாவில் சுற்றுலா பயணிகளைக் கவரும் வகையில் பூந்தோட்டம் அமைத்திட ரூ.72.58 கோடிகள்.

3. ராமேஸ்வரத்தினை முக்கிய சுற்றுலாத் தலமாக மேம்படுத்தி சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை ஏற்படுத்தும் திட்டத்திற்கு ரூ.99 கோடி.

பிரசாத் திட்டம்

1. தமிழ்நாட்டில் அமையப்பட்டுள்ள எட்டு நவகிரக கோவில்களில் பிரசாத் திட்டத்தின் சுற்றுலா பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்தும் திட்டத்திற்கு ரூ.44.95 கோடி.

2. சுற்றுலா மேம்பாட்டிற்காக தமிழ்நாடு அரசு 16 வது நிதிக்குழுவில் சுற்றுலா தலங்களில் உள்ள மராட்டியர்கள், நாயக்கர்கள் மற்றும் பாளையக்காரர்கள் எழுப்பிய பாரம்பரிய கட்டிடங்களை பாதுகாத்தல், புனரமைத்தல் மற்றும் மறு சீரமைத்தல் போன்ற பணிகளுக்காக ரூ.3000 கோடியினை மற்றும் சுற்றுலாத் துறை வளர்ச்சியினை மேம்படுத்த ரூ.1200 கோடியினை வழங்கிட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதை குறிப்பிட்டு ஒன்றிய அமைச்சர் அவர்கள் தலையிட்டு தமிழ்நாடு அரசு கோரிய நிதியினை 16வது நிதிக் குழு மூலம் வழங்க உரிய அழுத்தத்தை தர வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

இச்சந்திப்பின் போது தமிழ்நாடு சுற்றுலாத் துறை அமைச்சர் தமிழ்நாட்டில் சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தி சுற்றுலா பயணிகளுக்கான வசதிகளை உருவாக்கி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க தமிழ்நாடு அரசு உறுதிபூண்டுள்ளதாக தெரிவித்து கோரப்பட்டுள்ள அனைத்து நிதி உதவிகளையும் விரைவில் வழங்க வேண்டுகோள் விடுத்தார்.

இச்சந்திப்பின் போது தமிழ்நாடு அரசின் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். பி. சந்திரமோகன் மற்றும் சுற்றுலா துறை இயக்குநர் மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேலாளர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், ஆகியோர் உடன் இருந்தனர்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட முதல்வர் மு.க.ஸ்டாலினின் 'திராவிட மாடல்' ஆட்சியில்

3 ஆண்டில் 1,69,564 புதிய வேளாண் மின் இணைப்புகள் வழங்கி சாதனை!

மின்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அறிக்கை!

சென்னை, நவ.29-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 'திராவிட மாடல்' ஆட்சியின் மூன்றாண்டு காலத்தில் 1,69,564 புதிய வேளாண் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அ.தி.மு.க. ஆட்சியில் முந்தைய ஐந்தாண்டுகளில் வழங்கப்பட்ட மின் இணைப்புகள் 1,38,592 மட்டுமே என மின்சாரத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட இந்தியாவிலேயே முதன் முறையாக 1989-1990 ஆண்டில் உழவர்களுக்கு இலவச மின்சாரத் திட்டத்தைத் தொடங்கி வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். தொலைநோக்குப் பார்வையில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தால் தமிழ்நாட்டின் கிராமங்கள் துரித வளர்ச்சியை அடைந்தன. விவசாய நிலப்பரப்பு விரிவடைந்தது. விவசாயிகள் தன்னிறைவு பெற்றனர்.

2010-2011ஆம் ஆண்டு காலத்தில் ஒரே ஆண்டில் 77,158 இலவச வேளாண் மின் இணைப்புகளைக் கொடுத்துச் சாதனை படைத்தார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

மூன்றாண்டில் சாதனை புதிய சரித்திரம்!

அந்தச் சாதனைகளின் அடிச்சுவட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான 'திராவிட மாடல்' அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 1,69,564 புதிய வேளாண் மின் இணைப்புகளைக்

கொடுத்துப் புதிய சரித்திரம் படைத்திருக்கிறது. அதற்காக மின் கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 2016-2021 ஆண்டுகளில் அ.தி.மு.க. ஆட்சியில் உழவர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த வேளாண் மின் இணைப்புகளின் எண்ணிக்கை 1,38,592 மட்டுமே. ஆனால், 'திராவிட மாடல்' ஆட்சியில் மூன்றே ஆண்டுகளில் அந்த எண்ணிக்கையைக் கடந்து 1,69,564 புதிய மின் இணைப்புகளை வழங்கி சாதனை புரிந்துள்ளது.

3,38,380 ஏக்கர் பாசன வசதி!

வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக திட்டங்களைத் தீட்டி அக்கறையோடு செயலாற்றிவரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைகளால் வேளாண் மின் இணைப்புகளின் எண்ணிக்கை இந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது. இதனால், 3,38,380 ஏக்கர் வேளாண் நிலங்கள் பாசன வசதியைப் பெற்றிருக்கின்றன.

உழவர்களின் உள்ளத்தை வென்ற முதல்வர்!

உழவர்களின் உண்மைத் தோழனாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சாதித்துக் காட்டியிருக்கிறார்; உழவர்களின் உள்ளத்தை வென்றிருக்கிறார்.

இவ்வாறு மின்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மும்பை மாநில தி.மு.க. இளைஞரணி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

அலிசேக் மீரான் சிறப்புரை:

மும்பை, நவ. 29 -

தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினின் அவர்கள் பிறந்த நாள் விழா 30-11- 24 சனிக்கிழமை மும்பை மாநில திமுக இளைஞரணி அமைப்பாளர் ந.வசந்தகுமார் தலைமையில் தானே மாநகரில் உள்ள ஆதவ் பாக் அரங்கம் விஜய் அப்பார்ட்மெண்ட், டி விங், கிசன் நகர் தானே வில் மாலை சரியாக 6 மணியளவில் நடைபெறவுள்ளது.

மாநில செயலாளர் அலிசேக் மீரான் விழாச் சிறப்புரையாற்றுகிறார். துணை அமைப்பாளர் கி. வீரமணி வரவேற்றிட, மும்பை தி.மு.க. பொறுப்பாளர் கருவூர் இரா. பழனிசாமி, புறநகர் அவைத் தலைவர் ஜேம்ஸ் தேவதாசன், புறநகர் பொருளாளர் பி கிருஷ்ணன், துணைச் செயலாளர்கள் வதிலை பிரதாபன், அ. இளங்கோ,

திராவிடர் கழகத் தலைவர் பெ.கணேசன், அவைத் தலைவர் வே.ம. உத்தமன், இலக்கிய அணித் தலைவர் வே.சதானந்தன், பகுத்தறிவாளர் கழகத் தலைவர் அ.இரவிச்சந்திரன், தி.மு.கழகப் பேச்சாளர் முகமது அலி ஜின்னா, இலக்கிய அணித் துணை அமைப்பாளர் வெ.அ. ஜைனுல்லாபுதீன், இலக்கிய அணி பொய்சர் மூர்த்தி, இளைஞரணித் துணை அமைப்பாளர் இரா. கணேசன், இலக்கிய அணிப் புரவலர் எஸ்.பி.குமரேசன், டோம்பிவிலி கிளைக் கழகச் செயலாளர் வீரை சோ.பாபு ஆகியோர் வாழ்த்தி பேசுகின்றனர்.

விழாவில் பள்ளி மாணவர்களுக்கு இலவச புத்தகப்பை மற்றும் நோட்டுப் புத்தகங்க ளை தானே நகர திமுக முன்னோடி ஜாகிர் உசேன், கிளை செயலாளர் பாலமுருகன், இளைஞரணி துணை அமைப்பாளர் அமரன் உத்தமன், கிளைச் செயலாளர் சிவக்குமார் ஆகியோர் வழங்குகின்றனர்.

என்.வி. சண்முகராசன், எஸ்.பி.செழியன், எல்.பாஸ்கரன், க.ஜீவானந்தம், மெஹபூப் பாஷா, தமிழினநேசன், பெருமாள், பழனி, முஸ்தாக் அலி, தில்லை, ஆறுமுகம், எம்.இ.முத்து, குலசேகரன் ஜி.பசுபதிநாதன், சி.சுடலையாண்டி, நம்பி, ராஜேந்திரன், மூர்த்தி, ஆழ்வார், ஜஸ்டின், வேல்முருகன், எம். பொன்மணி, கு. தர்மலிங்கம்., சு.சேகர் சுப்பையா, மா.துரைராஜன், அ.கனகராஜ், அ.சேகர், அய்யாச்சாமி, செ. துரை, பி.கட்டி முத்து, ப.கணேசன் ராஜன், அ.பாண்டு., வீ.கே.சிவா, வீ.முனியன், அ.தமிழ்செல்வன், இல. ராசாங்கம், மு. கோவிந்த ராஜ் , ஸ்டீபன் டேவிட் மற்றும் பல கழக உணர்வாளர்கள் நிகழ்வில் முன்னிலை வகித்துச் சிறப்பிக்கவுள்ளார்கள். இறுதியாக மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் உதய் பாலமுருகன் நன்றி உரை ஆற்றுகிறார்

விழாவிற்கான ஏற்பாடுகளை மாநில இளைஞரணித் தோழர்கள் சிறப்பாக செய்து வருகிறார்கள். அனைவரும் நிகழ்வில் கலந்து மகிழுமாறு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்

பரந்தூர் - ஒசூரில் பசுமை விமான நிலையம்- எடுத்த நடவடிக்கை என்ன?

மாநிலங்களவையில் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் கேள்வி

புதுடெல்லி, நவ. 29 -

பரந்தூர் - ஒசூர் பசுமை விமான நிலையம் எடுத்த நடவடிக்கைகள் என்ன என்று மாநிலங்களவையில் கழக உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டில் பரந்தூர் மற்றும் ஒசூரில் பசுமை விமான நிலையம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. இந்த நடவடிக்கைகளின் விவரம் தொடர்பாக மாநிலங்களவை தி.மு.க. எம்.பி. கிரிராஜன் மாநிலங்களவையில் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு சிவில் விமான போக்குவரத்து இணை மந்திரி முரளிதர் மொகல் அளித்த எழுத்துப் பூர்வ பதிலில், ஒசூர் விமான நிலையத்துக்கு பாதுகாப்பு அமைச்சகம் தடையில்லா சான்று வழங்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

அந்த பதிலின் விரிவான விவரம் வருமாறு:

காஞ்சீபுரம் மாவட்டம் பரந்தூரில் பசுமை விமான நிலையம் அமைப்பதற்

கான தள அனுமதியைப் பெற சிவில் விமான போக்குவரத்துத்துறையிடம் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம் (டிட்கோ) விண்ணப்பித்து இருந்தது. இதன்பேரில் கடந்த ஆகஸ்டு மாதம் தள அனுமதி வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கொள்கை ஒப்புதலுக்கான விண்ணப்பம் டிட்கோ விடம் இருந்து பெறப்பட்டு இருக்கிறது.

ஒசூரில் பசுமை விமான நிலையத்துக்காக முன்மொழியப்பட்ட 4 தளங்களை விமானநிலைய ஆணைய அதிகாரிகள் மற்றும் டிட்கோ அதிகாரிகளைக் கொண்ட குழு கடந்த செப்டம்பர் மாதம் ஆய்வு செய்தது. அந்த பகுதியில் விமானப்படை மையம் இருப்பதை கருத்தில்கொண்டு பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகளுடன் கலந்து பேசப்பட்டது. பாதுகாப்பு அமைச்சகம் தள அனுமதியை வழங்கநிபந்தனைகளுடன் தடையில்லா சான்று வழங்கி இருக்கிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் நவ 27ல் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

பல்லாவரம் இ. கருணாநிதி எம்.எல்.ஏ ஏற்பாட்டில் அமைச்சர் தா.மோ அன்பரசன் அணிவிக்கிறார்

பல்லாவரம் நவ. 29

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் தமிழ்நாடு முதலமைச்சர் இளந் தலைவர் உதயாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு குரோம்பேட்டை அரசினர் மருத்துவமனையில் நவ27ல் பிறந்த குழந்தைகளுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ ஏற்பாட்டில் காஞ்சிபுரம் மாவட்ட கழக செயலாளர் சிறுகுறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்து கொண்டு தங்க மோதிரம் அணிவிக்கிறார் பல்லாவரம் சட்டமன்ற தொகுதியில் குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக ஜூன் 3 முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா மார்ச் 1 நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழா ஆகிய நாட்களில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்து மகிழ்விக்க வைக்கப்படுகிறார்கள் அதேபோல் கடந்த ஆண்டிலிருந்து நமது இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவிற்கும் தங்க மோதிரம் அணிவிக்கப்பட்டது அதேபோல் 2911 2924 இன்று காலை காலை 10 மணி அளவில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி தலைமையிலும் ஏற்பாட்டிலும் மாவட்ட கழக செயலாளர் மாண்புமிகு அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்து கொண்டு நவம்பர் 26 அன்று இரவு 12:00 மணியிலிருந்து நவம்பர் 27ஆம் தேதி இரவு 12 மணி வரை பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிக்கிறார் மற்றும் குழந்தைகளுக்கு பயன்படும் சோப்பு பவுடர் டவலகொண்ட பரிசு பெட்டகம் பழ கூடை ரொட்டி ஆகியவையும் வழங்கப்பட உள்ளன மருத்துவமனையில் குழந்தை பெற்று சிகிச்சை பெறும் அனைத்து தாய்மார்களுக்கும் வழங்கப்பட உள்ளன இந்நிகழ்ச்சியில் மண்டல தலைவர்கள் பகுதி கழகச் செயலாளர்கள் பகுதி கழக நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் வட்ட கழகச் செயலாளர் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் ஆகியோர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்

பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2க்கு உட்பட்ட. திருத்தணி நகரில் மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை தலைமையில் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் பூங்காக்கள் மேம்படுத்தும் பணிகளை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ கருணாநிதி துவக்கி வைத்தார் மாமன்ற உறுப்பினர் கலைச்செல்வி வெங்கடேசன் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் உதவி பொறியாளர்கள் வட்டக் கழக நிர்வாகிகள் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்

கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டம், மாவட்ட மகளிர் தொண்டர் அணி தலைவர் கு.பச்சையம்மாள் ஏற்பாட்டில், 100 நபர்களுக்கு புடவைகள் நலத்திட்டமாக, சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், வி.எஸ்.கலை, சங்கீதா, வட்ட செயலாளர்கள் துபாய் V.R.விஜய், ச.அசோக்குமார், மார்கெட் தேவராஜ், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் செந்தில் குமார், லதா லாரன்ஸ் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.